போதிய இடம் கிடைக்கவில்லை. எவ்வளவு முயற்சித்தும் அந்தப் பகுதியிலே கிடைக்கவில்லை. அதனால், அதற்கு அருகிலுள்ள வேலாயுதபுரத்தில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, இப்பொழுது அந்தப் பகுதியிலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான பணி நடைபெற்று வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரியபுளியம்பட்டியில் ஏற்கெனவே 33/11 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் நிறுவப்பட்டிருக்கிறது என்ற விவரத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். இவை தவிர, மாண்புமிகு உறுப்பினர் வேறு இடங்களில் துணை மின் நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தால், அந்தப் பகுதிகளிலுள்ள மின் பளுவைக் கருத்தில் கொண்டு, ஆய்வு செய்து, மின்சார வாரியத்தினுடைய நிதிநிலைக்கேற்ப, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அதுகுறித்து ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 331, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

331—

மேம்பாலம்

***18901—திரு. ஏ.கே. போஸ்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் தேவர் சிலை அருகே மேம்பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

2014 ஆகஸ்ட் 5]

(அ) மற்றும் (ஆ) மதுரையில் தேவர் சிலை அருகில் மேம்பாலம் கட்டும் பணிக்காக ஏற்பாடு செய்யப்பட்டு பாலத்தின் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் ஏற்றமிகு வாழ்க்கைக்கு வரலாற்றுச் சாதனை படைக்கும் பல திட்டங்களை வாரி வழங்கும் வள்ளல் குணம் நிறைந்த (மேசையைத் தட்டும் ஒலி) பெட்டகமே, அன்பின் திருவுருவம், சாதனைகளின் மறு உருவம், எனது தொகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான கோரிப்பாளையம் தேவர் சிலை அருகில் மேம்பாலத்தைக் கட்டுவதற்கு அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து முதலில் எனது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றேன்.

எனது தொகுதிக்குட்பட்ட மதுரை மாநகரின் மையப் பகுதியான கோரிப்பாளையம் தேவர் சிலை சந்திப்பானது மிகவும் போக்குவரத்து நெரிசல் நிறைந்த பகுதியாகும். அப்பகுதியில்தான் மாவட்ட ஆட்சியர் அலுவலகமும், அரசு இராஜாஜி பொது மருத்துவமனையும், அரசு அலுவலகங்களும், அமெரிக்கன் கல்லூரி, மீனாட்சி கல்லூரி போன்ற கல்லூரிகள் அனைத்தும் இயங்கி வருகின்றன. ஆகவே, அப்பகுதி, வாகனப் போக்குவரத்துகள் அதிகம் காணப்படும் பகுதியாகும். இதனால் இங்கு அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள், வேலைக்குச் செல்பவர்கள், மருத்துவமனைக்குச் செல்லும் அவசர ஊர்திகள் அனைத்தும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி காலதாமதம் ஏற்படுவதால் கோரிப்பாளையம் தேவர் சிலையருகில் சாலை மேம்பாலத்தை விரைந்து கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் தேவர் சிலை அருகில் மேம்பாலம் கட்ட குறிப்பிட்டுள்ள இடம், வாரணாசி–கன்னியாகுமரி சாலை, கிலோ மீட்டர் 440/2–ல் கோரிப்பாளையம் சந்திப்பில் அமைந்துள்ளது. அவ்விடத்தில் மேம்பாலம் கட்டுவதற்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தற்போது பாலத்தின் நேர்ப்பாடு இறுதி செய்யப்பட்டுள்ளது. இதன்தொடர்ச்சியாக பாலத்தின் வடிவமைப்பு தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும், விரிவான திட்ட அறிக்கையின்படி பாலம் கட்டுவதற்குத் தேவைப்படும் 1.13 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தும் பணி பரிசீலிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ் அவர்கள்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு செய்யப்படும் என்று சொன்னதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. முருகேசன் அவர்கள்.

திரு. து. முருகேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு தொகுதி, ஊரப்பாக்கம், நந்திவரம், கூடுவாஞ்சேரி, மறைமலை நகர், சிங்கப்பெருமாள்கோவில் ஆகிய இடங்களை ஒட்டியுள்ள ஜி.எஸ்.டி. சாலை போக்குவரத்து நெரிசலான சாலையாகும். அந்தச் சாலையைக் கடந்து செல்வதற்கு வாகனத்தில் செல்கிறவர்களும், பள்ளிக்குச் செல்கிறவர்களும், மாணவர்களும், வேலைக்குச் செல்கிறவர்களும், பொதுமக்களும், வியாபாரிகளும் பெரிதும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். அப்படி சாலையைக் கடந்து செல்கின்றபோது, வாகனம் மோதி உயிர்ச்சேதம் ஏற்படுகிறது. தினந்தோறும் வாகன விபத்துகள் ஏற்படுகின்றன. அதனால் அந்தப் பகுதியில் மேம்பாலம் அல்லது நடைபாதை மேம்பாலமாவது அமைத்துக் கொடுக்க மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள பகுதி போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள பகுதி. அங்கே அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாக இங்கே குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஒவ்வோர் ஆண்டும் எங்கெல்லாம் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதியிலே பாலம் கட்டுவதற்குரிய பணிகளை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. அதன்தொடர்ச்சியாக, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

திரு. ஜே.ஜி. பிரின்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலே ஆரல்வாய்மொழி முதல் களியக்காவிளை வரை இருக்கக்கூடிய சாலை 1943 ஆம் ஆண்டு போடப்பட்ட சாலை. அப்பகுதி, கேரள மாநிலத்தோடு இருந்த காலத்திலே போடப்பட்ட சாலை. அது மிகக் குறுகிய சாலையாக இருக்கிறது. மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்கூட அதைப் பார்வையிட்டால் சிறப்பாக இருக்கும். ஆகவே, போக்குவரத்துப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு வசதியாக சுங்கான்கடைக்கும், ஒழுகினசேரிக்கும் ஒரு மேம்பாலமும், சுங்கான்கடைக்கும், சுசீந்திரத்திற்கும் ஒரு மேம்பாலமும் அமைக்க மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சாலை

குறுகலாக இருக்கின்றது, அந்தப் பகுதியிலே உயர் மட்ட மேம்பாலம் கட்ட வேண்டுமென்று இங்கே வினா தொடுத்திருக்கின்றார்கள். இதனை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்பட்டு, அந்த ஆய்வின் அடிப்படையிலே அங்கு பாலம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமானால், பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.எஸ்.என். நடராஜ் அவர்கள்.

திரு. என்.எஸ்.என். நடராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கேயம் தொகுதி, காங்கேயம் நகராட்சி, வெள்ளக்கோவில் நகராட்சி ஆகிய இரண்டு பகுதிகளுக்கும் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு புறவழிச் சாலை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன். இன்றைக்கு இந்தியாவிலே தேங்காயிலிருந்து பெறக்கூடிய அனைத்துப் பொருட்களும் காங்கேயத்தில் விளைகின்ற நிலை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிகப்படியான வாகனங்கள், ஆயிரக்கணக்கான லாரிகள் வெளி மாநிலங்களிலிருந்து வந்து செல்கின்ற காரணத்தால், காங்கேயம் நகராட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புறவழிச் சாலை அமைத்துக் கொடுப்பார்களா என தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து நகராட்சிப் பகுதிகளிலும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக புறவழிச் சாலை படிப்படியாக அமைக்கப்படும் என்று அவையிலே தெரிவித்திருக்கின்றார்கள். அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள காங்கேயம் நகராட்சியில்

புறவழிச் சாலை அமைப்பது சம்பந்தமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டு சென்று நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 332, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

332—

சொந்தக் கட்டடம்

***38296—திரு. பொன். ராஜா:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், பெரியகரும்பூர் ஊராட்சி, குமரஞ்சேரி மற்றும் பெரியகரும்பூர் பகுதிகளிலுள்ள அங்கன்வாடி மையங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி பொன்னேரி தொகுதி, மீஞ்சூர் ஒன்றியம், பெரியகரும்பூர் ஊராட்சியில் 2009 ஆம் ஆண்டு முதல் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் குமரஞ்சேரி அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 69–ல் இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும், 1982 முதல் ஊராட்சிமன்றக் கட்டடத்தில் செயல்பட்டு வரும் பெரியகரும்பூர் அங்கன்வாடி மையத்திற்கு சர்வே எண் 252–ல் இடம் தேர்வு செய்யப்பட்டு, புதிய கட்டடம் கட்டும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன். ராஜா அவர்கள்.